**இலங்கை திறந்த பல்கலைக்கழகம்**
**மானுடவியல் மற்றும் சமூக விஞ்ஞானங்கள் பீடம்**
**சட்டக்கற்கைகள் திணைக்களம்**
**சட்டமாணி பட்டப்படிப்பு நிகழ்ச்சித்திட்டம்- 2023/2024**
**இறுதிப்பரீட்சை**
**மட்டம் - 4**
**LLU4805/ LWU 2311- ஒப்பந்த சட்டம்**
**காலம் - மூன்று (3) மணித்தியாலங்கள்**

திகதி: 10.05.2025 நேரம்: பி.ப 1.30 -பி.ப 4.30

மொத்த வினாக்களின் எண்ணிக்கை- 08

பகுதி I இலிருந்து ஒரு (01) வினாவையும் பகுதி II இலிருந்து நான்கு (04) வினாக்களையும் குறைந்தபட்சம் தெரிவு செய்து , மொத்தம் ஐந்து (05) வினாக்களிற்கு விடையளிக்க.

தெளிவற்ற கையெழுத்திற்கு புள்ளிகள் குறைக்கப்படும்.

## பகுதி I
### இப்பகுதியில் இருந்து ஏதேனும் ஒரு (01) வினாவிற்கு விடையளிக்க

1. அஞ்சலி என்பவள் கண்டியைச் சேர்ந்த பிரபல்யமான ஒரு சமையல் நிபுணர் என்பதுடன் , 'சுவீட் கிரேவிங்ஸ்' எனும் பெயருடைய பிரபல்யமான பேக்கரி ஒன்றை சொந்தமாகக் கொண்டிருக்கிறாள். அன்றாட நடவடிக்கைகளை மிக வினைத்திறனுடன் செயற்படுத்துவதற்கு , உணவு தயாரிப்பில் உதவவும் வாடிக்கையாளர்களின் கொள்வனவு கோரிக்கைளை (orders) பேணும் பொறுப்பை ஏற்கவுமான நம்பிக்கையின் மீது பிரியா என்பவளை முகவராக அவள் நியமிக்கிறாள். பின்வரும் சந்தர்ப்பங்களின் போது முகவராக பிரியாவின் நடத்தையில் இருந்து எழும் சட்ட விளைவுகளை ஆராய்க:

அ. அஞ்சலியின் அறிவிற்கு எட்டாது பிரியா 'சுவீட் கிரேவிங்ஸ்' இனுடைய உணவுப்பொருட்களை உண்மை விலையில் 15% மேலதிக அதிகரிப்புடன் விற்க ஆரம்பித்ததுடன் , அதனை ஒரு இரகசிய இலாபமாக அடைந்தாள்.

ஆ. பிரியா அதே பகுதியில் 'கிரேவ் பைட்ஸ்' எனும் தனது சொந்த பேக்கரியை இரகசியமாக ஆரம்பித்து , 'சுவீட் கிரேவிங்ஸ்' இனுடைய வழக்கமான வாடிக்கையாளர்களிடம் இருந்து கொள்வனவு கோரிக்கைகளை (orders) பெற ஆரம்பித்தாள்.

இ. அஞ்சலியின் அறிவிற்கு எட்டாது , அவளது சம்மதத்தையும் பெறாது பிரியா 'சுவீட் கிரேவிங்ஸ்' இல் பணியாற்றுவதற்கு உப முகவராக டிலான் என்பவனை நியமித்தாள்.

ஈ. 'சுவீட் கிரேவிங்ஸ்' சார்பில் பிரியா ஏற்றுக் கொண்ட பல வாடிக்கையாளர் கொள்வனவு கோரிக்கைகளிற்கு இணங்க உணவுப் பொருட்களை வழங்குவதற்கு தவறியிருந்தாள்.

(5 x 4 = 20 புள்ளிகள் )

2. பின்வரும் ஏதேனும் இரண்டின்(02) மீது சிறு குறிப்புகள் எழுதுக :

அ. முகவராண்மை சட்டத்தின் கீழ் முதல்வர் ஒருவரிற்கு மூன்றாம் திறத்தவர்கள் மீதான பொறுப்புடைமை
ஆ. ஒரு முகவராண்மை உறவு முடிவுறுத்தப்படக்கூடிய பல்வேறு வழிகள்
இ. ஒரு முகவர் தொடர்பில் முதல்வரிற்கு உள்ள கடமைகள்
ஈ. முகவராண்மை உறவுகளின் உருவாக்கம்

**(2x10= 20 புள்ளிகள்)**

பகுதி II

**இப்பகுதியில் இருந்து ஏதேனும் நான்கு (04) வினாக்களிற்கு விடையளிக்க.**

3. பின்வரும் வழக்குகளில் ஏதேனும் நான்கின் (04) முக்கியத்துவம் குறித்து விளக்குக.

அ. *Pharmaceutical Society of Great Britain v Boots Cash Chemists Ltd [1953] EWCA Civ 6*
ஆ. *Cutter v Powell Court of King's Bench Citations (1795) 6 Term Reports 320*
இ. *Carlill v Carbolic Smoke Ball Company (1893) 1 QB 256*
ஈ. *Hadley v Baxendale [1854] EWHC J70*
உ. *Public Trustee v Uduruwana 51 NLR 193*
ஊ. *Gallie v Lee [1970] UKHL 5*

**(5x4=20 புள்ளிகள்)**

4. (i) ஒப்பந்தச் சட்டத்தில் பிரதிபயன் எனும் கருத்தேற்பின் வரைவிலக்கணத்தை எடுத்துரைத்து ஒரு வலிதான ஒப்பந்தத்தின் உருவாக்கத்தில் இதன் முக்கியத்துவத்தை விளக்குக.

**(10 புள்ளிகள்)**

(ii) நல்லேது எனும் கருத்தேற்பில் இருந்து பிரதிபயன் எவ்வாறு வேறுபடுகிறது?

**(10 புள்ளிகள்)**

**(10x2=20 புள்ளிகள்)**

5. (i) ஒப்பந்தச்சட்டத்தில் 'விதிவிலக்கு வாசகங்கள்' எனும் கருத்தேற்பை வரைவிலக்கணம் செய்து விளக்குக.

**(10 புள்ளிகள்)**

(ii) தங்கும் விடுதி ஒன்றிற்கு சென்ற தம்பதி ஒன்று வரவேற்பறையில் பதிவிற்கான தேவைப்பாடுகளை நிறைவு செய்தனர். விருந்தினர்களின் தனிப்பட்ட உடைமைகளிற்கான ஏதேனும் இழப்பு அல்லது சேதம் என்பனவற்றிற்கு தங்கும் விடுதி பொறுப்புடையதாகாது எனத் தெரிவிக்கும் அறிவித்தல் ஒன்று அவர்களது அறையின் உட்சுவரில் காட்சிப்படுத்தப்பட்டிருந்ததைக் கண்டனர். அங்கு தங்கியிருந்த போது அவர்களது அறையில் இருந்து பல பெறுமதியானவை காணாமற் போயிருந்தன.

தங்கும் விடுதி விதிவிலக்கு வாசகத்தில் தங்கியிருக்க முடியுமா என அவர்களிற்கு அறிவுறுத்துக.

**(10 புள்ளிகள்)**

**(10 x 2= 20 புள்ளிகள்)**

6. (i) B என்பவர் குடியிருப்பாளர் ஒருவர் என்பதுடன் அவர் C இனுடைய வீட்டின் ஒரு பகுதியை 3 வருட கால குத்தகை ஒப்பந்த உடன்படிக்கையின் கீழ் கையகப்படுத்தியிருந்தார். அவ்வீட்டின் மற்றைய பகுதியில் C பாலியல் தொழிலை நடத்தி வருகிறார். பொலிசாரின் திட்டமிடப்பட்ட சோதனைனகளின் போது அவர்களை தவறாக வழிநடாத்தும் உதவிக்கு பிரதியீடாக B இனுடைய வாடகையை விலக்களிப்பு செய்வதற்கு C இணங்கினான். ஒரு வருடகாலத்தின் பின்னர் C இற்கு தொடர்ந்தும் உதவுவதற்கு B மறுக்கிறார். B இனை கடந்த வருட வாடகையை செலுத்துமாறு C கோரியும் B அவ்வாறு செலுத்துவதற்கு மறுக்கிறார்.

C இனால் உடன்படிக்கையை செயற்படுத்த முடியுமா என்றும் B இடமிருந்து வாடகையை மீளப்பெற முடியுமா என்றும் விளக்குக.

**(10 புள்ளிகள்)**

(ii) F எனும் சிரேஸ்ட வழக்கறிஞர் R எனும் புதிதாக தகைமையைப் பெற்ற வழக்கறிஞரை ஒரு தொழில் ஒப்பந்தத்தின் கீழ் தன் காரியாலத்தில் பணியாற்றுவதற்கு இணைத்துள்ளார். இக்காரியாலயத்தில் இருந்து நீங்கிய பின்னர் ஐந்த வருடங்களிற்கு நாட்டில் எங்கும் R சட்டத் தொழிலை தொடர்வதை தடை செய்யும் ஒரு வாசகம் ஒன்றை இந்த ஒப்பந்தம் கொண்டுள்ளது.

இவ்வாசகம் சட்டரீதியாக செயற்படுத்தக் கூடியதா என ஆராய்க. உமது விடையை பொருத்தமான சட்டக் கோட்பாடுகள் மற்றும் வழக்குத் தீர்ப்புகள் என்பனவற்றால் ஆதாரப்படுத்துக.

**(10 புள்ளிகள்)**

**(10x2=20 புள்ளிகள்)**

7. பின்வரும் ஏதேனும் <u>இரண்டின் (02)</u> மீது சிறு குறிப்புகள் எழுதுக:

அ. ஒரு வலிதான ஒப்பந்தத்தில் ஈடுபடுவதற்கான தகைமை
ஆ. ஒரு ஒப்பந்தத்தின் வலிதான நிறைவேற்றத்திற்கான தேவைப்பாடுகள்
இ. சாவேது கொடை *(Donatio mortis causa)*
ஈ. ஒரு ஒப்பந்தத்தின் நிலைகுலைவு

**(10x2= 20 புள்ளிகள்)**

8. அக்குவா கிராவ்ட் லிமிடட் ஆனது ரிவர் ரஸ் எட்வென்சர்ஸ் எனும் சுற்றுலா கம்பனியுடன் உள்நீர்நிலை மீன்பிடிக்கும், நீர் விளையாட்டிற்கும் பொருத்தமான பிரத்தியேகமாக அமைக்கப்பட்ட படகுகளை விநியோகிப்பதற்கு ஒப்பந்தம் ஒன்றில் ஈடுபட்டது. ரிவர் ரஸ் உடனடி மூன்று விடுமுறை சுற்றுலா பயணங்களை பதிவு செய்திருந்தமையால் ஒப்பந்தத்திற்கு அமைய படகுகள் 2024 ஜீன் 30 திகதிக்கு முன்னர் வழங்கப்பட வேண்டியிருந்தது. எவ்வாறாயினும் படகுகள் 2024 ஜீலை 03 திகதியே வழங்கப்பட்டதுடன் , இது தேவையான சோதனைக்கும் தயார்படுத்தல்களிற்கும் போதுமான கால அவகாசத்தை அளிக்கவில்லை. இதன் விளைவாக திட்டமிட்டவாறு சுற்றுலாக்களை செயற்படுத்துவதற்கு ரிவர் ரஸிற்கு முடியாது போனதுடன் ஏறத்தாழ 75 % பயணங்கள் இரத்து செய்யப்பட வேண்டியதாயின. இத்தாமதத்தால் ரிவர் ரஸிற்கு 200,000 ரூபா பெறுமதியான இழப்பு ஏற்பட்டதாகக் கோருகிறது.

அக்குவா கிராவ்ட் லிமிடட் இற்கு எதிராக ரிவர் ரஸ் எட்வென்சர்ஸிற்கு கிடைக்கத்தகு ஒப்பந்த முறிவிற்கான சட்ட நிவாரணங்களை ஆராய்க.

**(20 புள்ளிகள்)**

பதிப்புரிமை பெற்றது